COMMISSION FOR CHILDREN AND YOUNG PEOPLE

குழந்தைகளுக்குப் பாதுகாப்பான தரநிலைகள்
கருவிகள் மற்றும் வார்ப்புருக்கள்

# பொருத்தமான பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் மேம்படுத்துவதற்குமான நடைமுறை வழிகாட்டி

| பாதுகாப்பான ஊழியர்களையும் தன்னார்வலர்களையும் தேர்ந்தெடுத்தல் | நடைமுறைப் பரிந்துரைகள் | நல்ல பலன்கள் |
|---|---|---|
| அந்தப் பாத்திரம் குழந்தைகளுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொள்ளவேண்டுமா அல்லது குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களைப் பற்றிய உணர்வுபூர்வமான தகவல்களை அணுக வேண்டுமா என்பதைத் தீர்மானித்தல். | அந்தப் பாத்திரத்திற்கு குழந்தைகளுடன் எந்த வகையிலான தொடர்பு இருக்கும் மேலும் தனிப்பட்ட குழந்தைகள் சார்ந்த தகவல்களுக்கு எந்த வகையிலான அணுகல் இருக்கும் என்பதைப் பொறுத்து இவை தீர்மானிக்கப்படும்:<br>• இந்தப் பாத்திரத்திற்கு குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பு சட்டபூர்வமாக தேவையா, அல்லது குழந்தைகளுக்கான ஆபத்துகளைக் குறைப்பதற்கு குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பு தேவையா<br>• பிற ஆய்வு மற்றும் சரிபார்ப்புகள் தேவைப்பட்டால்<br>• இந்தப் பாத்திரத்திற்குத் தேவைப்படும் பயிற்சியின் வகை மற்றும் கண்காணிப்பு நிலை. | பாத்திரத்திற்கான சரியான அளவு பின்புல சரிபார்ப்புகள், பயிற்சிகள் மற்றும் மேற்பார்வைகள் இருக்கின்றன. |
| கடமை அறிக்கை அல்லது வேலை விளக்கத்தை உருவாக்குதல் | ஒரு கடமை அறிக்கை அல்லது வேலை விவரிப்பு அந்தப் பதவியின் பங்கு, பொறுப்புகள் மற்றும் எதிர்பார்ப்புகளைத் தெளிவுபடுத்துகிறது | மிகவும் பொருத்தமான பணியாளர்கள் அல்லது தன்னார்வலர்களின் ஆட்சேர்ப்பு. |

| பாதுகாப்பான ஊழியர்களையும் தன்னார்வலர்களையும் தேர்ந்தெடுத்தல் | நடைமுறைப் பரிந்துரைகள் | நல்ல பலன்கள் |
|---|---|---|
| | அத்துடன் அறிக்கையிடல் வழிகளைக் கோடிட்டுக் காட்டுகிறது.<br><br>பதவிக்கு குழந்தைகளுடன் பணிபுரிதல் சரிபார்ப்பு, தொழில்முறை பதிவு அல்லது தகுதி தேவையா என்பதைத் தீர்மானிக்கவும். | |
| முக்கிய தேர்வு அளவுகோல்களை உருவாக்குதல் | கடமை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான முக்கிய திறன்கள், பண்புக்கூறுகள் மற்றும் அனுபவத்தை அடையாளம் காண தேர்வு அளவுகோல்கள் உதவுகின்றன. | உங்களுக்கு என்ன தேவை என்று முன்கூட்டியே யோசித்தால், சரியான நபரைத் தேர்ந்தெடுப்பது எளிதாக இருக்கும். |
| பதவியை விளம்பரப்படுத்துதல் | குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை கொண்ட ஒரு குழந்தைப் பாதுகாப்பு அமைப்பு நீங்கள் என்பதை விளம்பரப்படுத்தவும். | குழந்தைப் பாதுகாப்பு என்பது உங்கள் நிறுவனத்தின் பண்பாட்டின் ஒரு பகுதியாகும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது மற்றும் அதே போன்ற மதிப்புகளைக் கொண்ட மக்களை ஈர்க்க உதவுகிறது. |
| விண்ணப்பதாரர்களை நேர்காணல் செய்தல் | குழந்தைகளுடன் பணிபுரிய விண்ணப்பதாரரின் உந்துதலைப் பற்றிக் கேளுங்கள்.<br><br>விண்ணப்பதாரரின் உண்மையான வாழ்க்கை அனுபவம் மற்றும் கீழ்க்கண்டவை குறித்த அவர்களின் புரிதல் பற்றிய கேள்விகளைக் கேளுங்கள்:<br><br>• குழந்தைகளின் உடல் மற்றும் உணர்ச்சிகள் தொடர்பான தேவைகள்<br>• தொழில்முறை எல்லைகள் | விண்ணப்பதாரரின் திறன்கள் மற்றும் பொருத்தத்தை மதிப்பிடுவதற்கு நியாயமான வாய்ப்பை அனுமதிக்கக்கூடிய மற்றும் நேர்மையான ஒரு செயல்முறை. |

| பாதுகாப்பான ஊழியர்களையும் தன்னார்வலர்களையும் தேர்ந்தெடுத்தல் | நடைமுறைப் பரிந்துரைகள் | நல்ல பலன்கள் |
|---|---|---|
| | • குழந்தைகளுடைய உரிமைகள்.<br><br>விண்ணப்பதாரரின் விழுமியங்களை ஆராய்ந்து, அவர்கள் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு மீதும் குழந்தைகள் மீதான துர்ப்பிரயோகம் மற்றும் தீங்குகளைத் தடுப்பதில் அர்ப்பணிப்புடன் இணைந்திருக்கிறார்களா என்று ஆராயுங்கள்.<br><br>பழங்குடியினரின் கலாசார பாதுகாப்பு மற்றும் அனைத்து குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களை உள்ளடக்கிய நடைமுறைகள் குறித்து விண்ணப்பதாரரின் அணுகுமுறை பற்றி விவாதிக்கவும்.<br><br>**பயனுள்ள கேள்விகள்:**<br><br>• குழந்தைகள் மற்றும் இளம்வயதினருடன் பணிபுரியும் அல்லது குழந்தைகள் மற்றும் இளைஞர்களுடன் பணிபுரியும் நிறுவனங்களில் பணிபுரியும் உங்கள் அனுபவங்களைப் (ஏதேனும் இருந்தால்) பட்டியலிடவும். இது உங்கள் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் இருக்கலாம் (விளையாட்டுகளில் பங்குபெறுதல் போன்ற தன்னார்வப் பணிகள் உட்பட).<br>• ஒரு வயது வந்தோர் மற்றும் குழந்தை அல்லது இளம்வயதினருக்கு இடையே பொருத்தமான மற்றும் பொருத்தமற்ற நடத்தை என்று நீங்கள் கருதும் உதாரணங்களைத் தரவும்.<br>• ஒரு சக ஊழியர் ஒரு குழந்தையுடன் தகாத முறையில் நடந்து கொள்கிறார் என்று நீங்கள் நினைத்தால் என்ன செய்வீர்கள்? | |

| பாதுகாப்பான ஊழியர்களையும் தன்னார்வலர்களையும் தேர்ந்தெடுத்தல் | நடைமுறைப் பரிந்துரைகள் | நல்ல பலன்கள் |
|---|---|---|
| | • குழந்தைகள் மற்றும் இளம்வயதினருடன் ஈடுபடுவதற்கான உங்கள் அணுகுமுறையை எவ்வாறு விவரிப்பீர்கள்?<br><br>தேர்வுக் குழுவில் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களைக் கொண்டிருங்கள், இதன் மூலம் விண்ணப்பதாரர்கள் பற்றிய கருத்துகளைப் பற்றி விவாதிக்க முடியும். முடிந்தால், வெவ்வேறு பாலினங்கள் போன்ற பல்வேறு குணாதிசயங்கள் மற்றும் பின்னணிகளைக் கொண்ட நபர்களின் கலவையை தேர்வுக்குழுவில் வைக்கவும். குழுவில் ஒரு இளம்வயதினரைச் சேர்ப்பது உங்களுக்கு வேறுபட்ட கண்ணோட்டத்தைப் பெற உதவும்.<br><br>எந்த நபரை நியமிப்பது என்பதை உங்களால் உறுதியாக முடிவு செய்ய முடியாவிட்டால் அல்லது விண்ணப்பித்த ஒருவரைப் பற்றி சில சந்தேகங்கள் இருந்தால் இரண்டாவது நேர்காணலை நடத்தவும். இரண்டாவது நேர்காணலில், சுதந்திரமான உரையாடல் மற்றும் கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில், முறைசாரா விவாதத்தை நீங்கள் நடத்த விரும்பலாம். | |
| குறைந்தபட்சம் இரண்டு பரிந்துரைகளைச் சோதனை செய்தல் | குறைந்தது இரண்டு பரிந்துரைகளை சோதனை செய்ய வேண்டும். எழுதப்பட்ட பரிந்துரைகளை ஏற்க வேண்டாம். எப்பொழுதும் பரிந்துரைக்கும் நபரிடம் நீங்கள் பேச வேண்டும்.<br><br>விண்ணப்பதாரரின் தற்போதைய அல்லது மிக சமீபத்திய பணியமர்த்திவர்களிடம் இருந்து ஒரு பரிந்துரையேனும் கேளுங்கள். | விண்ணப்பதாரரைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது, விண்ணப்பதாரரின் தகுதியைப் பற்றி தகவலறிந்து முடிவுகளை எடுக்க உதவுகிறது. |

| பாதுகாப்பான ஊழியர்களையும் தன்னார்வலர்களையும் தேர்ந்தெடுத்தல் | நடைமுறைப் பரிந்துரைகள் | நல்ல பலன்கள் |
|---|---|---|
| | குழந்தைகளுடன் விண்ணப்பதாரர் பணிபுரிவதைப் பரிந்துரை செய்பவர் தனிப்பட்ட முறையில் கவனித்திருக்க வேண்டும்.<br><br>**பயனுள்ள கேள்விகள்:**<br>• அந்த நபர் குழந்தைகளுடன் பழகுவதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? அந்த நபர் குழந்தைகளுடன் கொண்டிருந்த உறவுகள் மற்றும் உரையாடல்களின் முறையை உங்களால் விவரிக்க முடியுமா?<br>• விண்ணப்பதாரரை மீண்டும் வேலைக்கு அமர்த்துவீர்களா?<br>• விண்ணப்பதாரர் குழந்தைகளுடன் நேரடியாக பணிபுரிவது குறித்து உங்களுக்கு ஏதேனும் கவலைகள் உள்ளதா?<br>• விண்ணப்பதாரர் சில சமயங்களில் குழந்தைகளுடன் தனியாக இருக்கக்கூடும் என்பதில் உங்களுக்கு மன அமைதி இருக்கிறதா?<br>• ஒரு குழந்தை சவாலான நடத்தையை வெளிப்படுத்தும் பொழுது விண்ணப்பதாரர் அதற்குப் பதிலளித்ததை நீங்கள் கவனித்த ஒரு உதாரணத்தை எங்களுக்குக் கொடுக்க முடியுமா?<br>• அந்த நபருடன் தொடர்புடைய ஏதேனும் ஒழுங்கு விஷயங்கள் அல்லது நிறுவனத்தின் நடத்தை விதிகளை அவர் கடைப்பிடிப்பது குறித்த கவலைகள் உங்களுக்கு இருந்ததா? | |

| பாதுகாப்பான ஊழியர்களையும் தன்னார்வலர்களையும் தேர்ந்தெடுத்தல் | நடைமுறைப் பரிந்துரைகள் | நல்ல பலன்கள் |
|---|---|---|
| ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் அறிமுகம், மேற்பார்வை, ஆதரவு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை வழங்குதல் | நிறுவனத்தின் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை, நடத்தை விதிகள் மற்றும் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் புதிய பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களை நன்கு அறியச்செய்யுங்கள்.<br><br>கீழ்க்கண்டவை தொடர்பாகத் தொடர்ந்து பயிற்சியளியுங்கள்:<br><br>• குழந்தை துர்ப்பிரயோகம் மற்றும் தீங்கின் அறிகுறிகளைக் கண்டறிதல் அதற்குப் பதிலளித்தல்<br>• ஒரு குழந்தைக்கு தீங்கு விளைவிப்பதைப் பற்றி யாராவது வெளிப்படுத்துவதை ஆதரித்தல்<br>• குழந்தை துர்ப்பிரயோகம் மற்றும் தீங்கு விளைவிக்கும் அபாயங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நிர்வகித்தல்<br>• குழந்தைகளின் அதிகாரம் மற்றும் பங்கேற்பு<br>• பதிவு செய்தல் மற்றும் தகவல் பகிர்வு<br>• குழந்தைகளுக்குப் பாதுகாப்பான அறிக்கை மற்றும் பதில் கடமைகள்<br>• கலாசார பாதுகாப்புகளும் உள்ளடக்கிய நடைமுறைகளும்.<br><br>பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களின் தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் மேலாண்மை குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வில் கவனம் செலுத்துவதை உள்ளடக்க வேண்டும். இது வழக்கமான பணியாளர் மேற்பார்வை, தொழில்முறை மேம்பாட்டுத் | பணியாளர்களும் தன்னார்வலர்களும் குழந்தைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பது, தீங்குகளைத் தடுப்பது மற்றும் குறைப்பது மற்றும் நம்பிக்கையுடன் செயல்படுவது எப்படி என்பதைப் புரிந்துகொள்கிறார்கள். |

| பாதுகாப்பான ஊழியர்களையும் தன்னார்வலர்களையும் தேர்ந்தெடுத்தல் | நடைமுறைப் பரிந்துரைகள் | நல்ல பலன்கள் |
|---|---|---|
| | திட்டங்கள், பணியாளர் மன்றங்கள் மற்றும் கூட்டங்கள் மூலம் இருக்கலாம்.<br>பணியாளர்கள் அல்லது தன்னார்வலர்கள் நிறுவனத்தின் குழந்தை பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு நடத்தை விதிகளை கடைபிடிக்கவில்லை என்றால், பணியாளர் அல்லது தன்னார்வலரிடம் அதைச் சுட்டிக்காட்டுதல், அவர்கள் நடத்தையில் மாற்றம் உள்ளதா என சரிபார்ப்பது உட்பட நடவடிக்கை எடுக்கப்படும். | |